பக்கங்கள்:11 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 07 செவ்வாய்க்கிழமை 21.06.2022 கதிர் 228

### இனிது ரகசியம் அல்ல!

எதிரியை வீழ்த்துவதற்கான தந்திரங்களில் முக்கியமான ஒன்று – சமய சந்தர்ப்பம் பார்த்துத் தாக்குவது. அது யுத்தத்தில் அல்லது மோதலில் என்று மட்டுமல்ல, அரசியல், சமூக வாழ்வு பொதுக்கட்டமைப்பு என எதற்கும் பொருந்தும். ☞2

# நாடாளுமன்றைப் பகிஷ்கரிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

## இன்று சபையில் சஜித் அறிவிப்பார்

(நமது விசேட அரசியல் செய்தியாளர்)

கொழும்பு, ஜூன் 21

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்றுடன் நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்தது. ☞03

இடைக்கால உத்தரவு வழங்குவது தொடர்பான

## உயர்நீதிமன்ற முடிவு வரும் வரை தம்மிக பெரேரா பதவியேற்கார்!

தனது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை தாம் நாடாளுமன்ற உறுப்பினராகவோ அமைச்சராகவோ பதவிப் பிரமாணம் செய்யப் போவதில்லை என கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா உயர் நீதிமன்றத்தில் நேற்று உறுதியளித்துள்ளார்.

அந்த உறுதிமொழியை நீதிமன்றம் தனது கட்டளையாக நேற்றுப் பதிவு செய்து கொண்டது.

பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தம்மிக பெ ☞03

## 21 ஆவது திருத்தச் சட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்தது!

நீதி அமைச்சர் விலயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட நகல் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்த அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் நகல் விரைவில் நாடாளுமன்றத்தில் ☞03

## சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் இனி வெள்ளியன்று

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுகாதாரப் பணியாளர்களுக்கு பிரத்தியேகமாக விசேட எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை நிறைவேற்ற பெரிதும் உதவும் என சுகாதார அமைச்சர் மேலும் கூறினார்.

இதன்படி, சுகாதார பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு ☞03

## நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் நேற்று பிரதமர் தலைமையிலான குழு கலந்தாய்வு

பத்துப்பேர் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இலங்கைப் பிரதிநிதிகளுடன் நேற்றுக் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன குறித்த நேரத்திற்குக் கலந்து கொள்ள முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ☞03

## பலாலி விமானக் கட்டண மாறுபாடு நேற்று அமைச்சரவையில் ஆராய்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் சென்னை இடையிலான விமானப் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்துக் காணப்படுவது தொடர்பில் நேற்றைய அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள விமானசேவையின்போது யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்குச் செல்லும் கட்டணம் கொழும்பில் இருந்து சென்னைக்குச் செல்லும் கட்டணத்தை விட அதிகமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது கட்டுநாயக்காவில் இருந்து சென்னைக்குச் செல்லும் விமானங்களிற்கான சிட்டை இரு ☞03

## கோட்டாபய வெளியேறும் வரை நாடு உருப்படவே உருப்படாது!

அடித்துக் கூறுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



தற்போதைய ஜனாதிபதியின் கீழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்காது, அவர்கள் வெளியேறும்போதுதான் நாடு மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கான வாய்ப்புகளுக்குரிய வாயில்கள் திறக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிறேமதாஸ தெரிவித்தார்.

மறுசீரமைப்புக்கான ☞03

## மொரட்டுவையில் வெட்டிக் கொலை

மொரட்டுவை, கட்டுபெத்த, மோல்பே வீதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் இனந்தெரியாத இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் கைகள் முன்னால் கட்டப்பட்டிருந்தன ☞03

## நாட்டை மீட்பாராம் கோட்டா இன்னும் நம்புகிறார் மஹிந்தர்



நெருக்கடியில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை மீட்டெடுப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது எனவரின் மூத்த சகோதரனும் முன்னாள் ஜானாதிபதியும், முன்னாள் பிரதமரும் மஹிந்த ☞03

## ஆர்ப்பாட்டக்காரர்கள் 21 பேருக்கும் பிணை

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட 21 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லோட்டஸ் சுற்று ☞03

NALIN IT
exclusive showroom
இப்பொழுது இல. 51 ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக
SALES & SERVICE AVAILABLE
LAPTOP MOTHER BOARD CHIP LEVEL REPAIR
intel hp DELL ASUS acer lenovo
☎ 076 359 4359 021 221 0404

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொஞ்சக் காலம் மந்த கதியில் செயற்பட்ட 'கோட்டா கோ கம' நேற்று அப்படி சமய சந்தர்ப்பம் – நேர காலம் – பார்த்துத் தான் புதிய உத்வேகத் தாக்குதலை நடத்தி இருக்கிறது.

நேற்று ஜனாதிபதி கோட்டாபயவின் 73 ஆவது பிறந்த தினம் என்பது அதற்குக் காரணம் அல்ல. சந்தர்ப்பவசமாக 'கோட்டா கோ கம'வுக்கு நேற்று ஆயுள் 73 ஆவது நாள். இந்த இரண்டு 73 களும் ஒன்றாக வந்துள்ளமை எதேச்சையாக நிகழ்ந்த இணைச் சம்பவங்கள்.

நேற்றுத்தான் இலங்கையைப் பிணை எடுப்பதான விவகாரம் குறித்துப் பேச்சு நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் முதல் அதிகாரிகள் குழு கொழும்பு வந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் காலையில் கலந்தாய்வு நடத்தத் தயாரானது.

எந்த உதவியையும் அளிப்பதற்கு நாட்டில் நம்பகரமான ஆட்சி இருக்க வேண்டும், அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்றெல்லாம் சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச தரப்புகள் அனைத்தும் வலியுறுத்தி வருகின்றன.

நாட்டின் ஆட்சி முறைமையின் ஸ்திரத்தன்மை, அரசியல் உறுதிப்பாடு எந்தச் சீத்துவத்தில் உள்ளது என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்டவே 'கோட்டா கோ கம' நேற்று வீச்சுடன் தனது நிலையை விஸ்தரிக்க முயன்றது. பழைய நாடாளுமன்றக் கட்டடத்தின் நிதி அமைச்சு அலுவலகம் வரை தனது வழிமறிப்புப் போராட்டப் பரப்பை அது விஸ்தரிக்க முயன்றமை அதற்குத்தான்.

நிதியமைச்சின் அலுவலகத்துக்குள் அதிகாரிகளையே நுழையவிடாமல் மக்கள் ஜனநாயக வழிமறிப்பை முன்னெடுக்கின்றார்கள், இந்த அரசுடன்தான் – இந்த நிதி அமைச்சுடன்தான் – பேச்சு நடத்தி உதவியளிக்கும் கடன் திட்டங்களை வாரி வழங்கப் போகின்றீர்களா என்ற கேள்வியை எழுப்புவது மாதிரி 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களின் நேற்றைய 'பாய்ச்சல்' நடவடிக்கை அமைந்தது.

'உங்களோடு பேசிச் சரிவராது. புதிய மக்கள் ஆணையைப் பெற்ற மக்கள் பிரதிநிதிகளாகப் பேச வாருங்கள். அப்போது பார்க்கலாம்' – என்ற செய்தியை சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் மூலம் கோட்டா – ரணில் அரசுத் தலைமைக்குக் கொடுக்கச் செய்வது நேற்றைய போராட்டத்தின் பின்புல நோக்கமாகத் தோன்றுகின்றது.

சரியோ, பிழையோ இந்தப் போராட்டத்தினால் நிதி அமைச்சின் செயலாளர் நேற்றுக் காலை சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுடனான பிரதமரின் கூட்டத்திற்கு அரை மணித்தியாலம் தாமதித்தே போக இயலுமாயிற்று. அதுவே நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு ஒரு செய்திதான்.

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை எட்டிவிட்டது. இந்த அரசு இதைச் சமாளித்து மீண்டெழும் என்ற நம்பிக்கை அருகி வருகின்றது. விபரீதங்களை அவர்கள் விரைவில் எதிர்கொள்ள வேண்டி நேரும் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

★ ★ ★

21 ஆவது அரசமைப்புத் திருத்த விவகாரம் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போன்ற நிலைமைதான். எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தனிநபர் சட்டமூலமாகச் சமர்ப்பித்த 21 ஆவது அரசமைப்புத் திருத்தம், உயர்நீதிமன்றத்தின் பரிசீலனை வரை சென்று அங்கு தேங்கி நிற்கின்றது. உயர்நீதிமன்றத்தின் முடிவு – தீர்ப்பு – இப்போது உடனடியாக வெளிவந்தாலும், அதற்கப்பால் அந்த வரைவு சட்டமாவதற்குரிய திசையில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

இரண்டு காரணங்கள்.

ஒன்று – முழுமையாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிக்கும் அந்தத் திட்டத்தை இந்த அரசு ஏற்காது. அதனால் எதிர்க்கட்சியின் இந்த சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்நகர்வதற்கான வாய்ப்புகள் இல்லை.

அடுத்தது – இன்றுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பெரும்பாலும் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க போகின்றது. அதனால் அத்தரப்புக் கொண்டுவந்த 21 ஆவது அரசமைப்புத் திருத்த வரைவு, அநாதைச் சட்டமூலமாக நாடாளுமன்றப் பதிவுகளில் தூங்க வேண்டியதுதான். அதற்கு அப்பால அது முன் நகர வாய்ப்பில்லை.

அதேசமயம் இப்போதைய ஆளும் தரப்பு – மொட்டுக் கட்சி – நேற்று அமைச்சரவையில் அங்கீகரித்த 21 ஆவது திருத்த வரைவு நாடாளுமன்றத்திற்கு வருவதற்காக இவ்வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் 46 எம்.பிக்களும் பகிஷ்கரிப்பு முடிவை எடுத்தால், எஞ்சியுள்ள 179 உறுப்பினர்களில் 150 பேரின் ஆதரவை இந்த 20ஆவது திருத்தத்துக்கு பெற்றால்தான் அதைச் சட்டமாக்க முடியும். அதனால் அதில் ஒரு நெருக்கடி உண்டு.

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் இல்லாத சமயத்தில், அதன் ஆதரவின்றி, அரசின் 21 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படுவது சிக்கலான விடயமாகத்தான் மாறியிருக்கின்றது.

தனது பகிஷ்கரிப்பு மூலம், இப்போது அரசு கொண்டுவரும் 21 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதா அல்லது எதிர்ப்பதா என்று முடிவெடுக்கும் சிக்கல் தனக்கு வராமல் சஜித் பிரேமதாஸா காய் நகர்த்தி இருக்கின்றார் என்றே நான் நினைக்கிறேன்.

அடுத்து வரும் நாள்களில் அது தெளிவாகும் என நாம் நம்பலாம். அது வரைப் பார்த்திருப்போம்.

– மின்னல் –







காலைக்கதிர் Kalaikkathir

## நாணய நிதியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்புகோட்டைபகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக அவர் சுமார் அரை மணித்தியாலம் தாமதமாகவே கூட்டத்திற்குச் சென்றார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஆரம்பக் கருத்துப் பரிமாற்றம் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நாடு தற்போது முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இலங்கை எதிர்பார்த்துள்ள நிதி நிவாரணத்தை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளும் முயற்சியாகவே இந்தப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

---

## கோட்டாபய வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் இயக்கம்,சர்வ கட்சி பேராட்டக்காரர்கள் உட்பட பல சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் –

அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறை மூலம் நாடு ஜனநாயக நிலைக்கு மாறும் வரை நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும். மக்களின் எதிர்பார்ப்புகளுடன் விளையாடி போராட்டத்தை காட்டிக் கொடுக்க முடியாது.

போராட்டம் நடத்தும் இளைஞர்களை அரசாங்கம் கைது செய்துள்ளது. அவர்களுக்கு எதிராக மிலேச்சத்தனத்தை அரசு பிரயோகின்றது. கடந்த 9 ஆம் திகதி பயங்கரவாதத்தை ஆரம்பித்தவர்கள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். யார் தவறு செய்தாலும் தவறு தவறுதான், அது தனி நபர்களுக்கு வேறுபடாது எனக் குறிப்பிட்டார்.

---

## ஆர்ப்பாட்டக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வட்டத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் தேரர் ஒருவர், பெண்கள் 4 பேர் மற்றும் 16 ஆண்கள் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## மொரட்டுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் மார்பு மற்றும் இடுப்பில் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு பிரதேசவாசி ஒருவர் செய்த தொலைபேசி அழைப்பை அடுத்து சடலம் கண்டெடுக்கப்பட்டதாக மொரட்டுமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

---

## பலாலி விமானக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழிப் பயணத்திற்காக 62 ஆயிரம் ரூபா முதல் 75 ஆயிரம் ரூபாவிற்கு இடைப்பட்டே காணப்படுகின்றது. இதேநேரம் யாழில் இருந்து சென்னைக்கான இருவழிக் கட்டணமாக ஒரு லட்சம் ரூபா கோரப்படுவது மிக அதிக தொகை என்றே சுட்டிக் காட்டப்பட்டது.

இருந்தபோதும் கொழும்பில் இருந்து திருச்சிக்கான பயணத்திற்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்ற போதும், யாழில் இருந்து திருச்சி சென்று திரும்பினால் 80 ஆயிரம் ரூபா மட்டுமே அறவிடப்படுகின்றதாகக அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கான விமானக் கட்டணம் குறைப்பதற்கான எந்த வழிமுறையும் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை.

## நாடாளுமன்றைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு மற்றும் உயர்மட்ட பிரமுகர்களுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இந்த முடிவை எடுத்திருக்கிறார் எனத் தெரியவந்தது.

நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வழிவகைகள் இந்த நாடாளுமன்றம் மூலம் எடுக்கப்படலாம் என்ற நம்பிக்கையை முழுமையாக இழந்த பின்னணியிலேயே இந்த முடிவைத் தாங்கள் எடுக்கிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் வட்டாரங்கள் காலைக்கதிருக்குத் தெரிவித்தன.

இன்று நாடாளுமன்றம் கூடும் போது அதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பங்கு பற்றுவார்கள். தங்கள் கருத்துக்களைக் காரசாரமாக அங்கு எடுத்துரைத்த பின்பு இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தாங்கள் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதற்கு முடிவெடுத்த காரணங்களை விளக்கி உரையாற்றிய பின்னர், சபையில் இருந்து ஒன்றாக வெளிநடப்பு செய்து வெளியேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெருப்பாக தகிக்கும் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வலிமை இந்த நாடாளுமன்றுக்கு இல்லை என்றும், நேரடியாக மீண்டும் மக்கள் ஆணை பெறுவது ஒன்றே தீர்வு என்றும், ஐக்கிய மக்கள் சக்தி இன்று அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சுகாதாரப் பணியாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையங்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அது தொடர்பில் வடக்கின் விவரங்கள் வருமாறு:–

யாழ்ப்பாணம் – கொக்குவில் ஏ.எம் தனநாயகம்; யாழ்ப்பாணம் நகரம் ராஜன் உமையாள் எரிபொருள் நிலையம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவு சங்கம்.

வவுனியா – சண்முகநாதன் ஆனந்தராஜா, வவுனியா.

மன்னார் – மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

கிளிநொச்சி – கிளிநொச்சி யுனைட்டட் பியூவல் மார்ட்.

முல்லைத்தீவு – எஸ் டிலக்சன் ஏ.டபிள்யூ, முல்லைத்தீவு.

அதேபோல அம்பாறையில் மூன்று எரிபொருள் நிலையங்களும், மட்டக்களப்பு, திருகோணமலையில் தலா இரண்டு எரிபொருள் நிலையங்களும், கல்முனையில் ஒரு எரிபொருள் நிலையமும் இப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

## நாட்டை மீட்பாராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நேற்றைய பிறந்தநாளை முன்னிட்டு அவர் ருவிட்டரில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர் தனது வாழ்வின் மற்றொரு வருடத்தில் அடியெடுத்து வைக்கும்போது அனைத்திற்கும் நல்வாழ்த்துக்கள். அவரது இருப்பு எப்போதும் பலத்தின் ஆதாரமாக இருந்து வருகிறது. மேலும் நெருக்கடியிலிருந்து இந்த நாட்டை அவர் மீட்டெடுப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என பதிவிட்டுள்ளார்

---

## 21ஆவது திருத்தச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமர்ப்பிக்கப்படும் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த நகலின் உள்ளடக்கங்களின் விவரம் இந்தச் செய்தி பிரசுரத்துக்குச் செல்லும் வரைத் தெரியவரவில்லை.

# சைக்கிள்களை சோதனைக்குட்படுத்த நடவடிக்கை விபத்துக்களை குறைக்கும் நோக்கில் புதிய திட்டம்!

அடுத்து வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்கு சைக்கிள் ஓட்டுநர்களை சோதனைக்கு உட்படுத்தி தேவையான ஆலோசனைகளை வழங்கும் புதிய நடவடிக்கை ஒன்று பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபரால், அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், வலயங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, பலரும் தற்போது சைக்கிள்களை பயன்படுத்தும் நிலையில், கடந்த கால தரவுகளுடன் ஒப்பீடு செய்து, விபத்து சம்பவங்கள் அதிகரிக்காமல் இருப்பதை உறுதி செய்யும் விதமாக இந்தப் புதிய திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நடப்பு ஆண்டில் (2022) இதுவரை 1202 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளமையுடன், அந்த விபத்துக்களால் 96 சைக்கிள் ஓட்டுநர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

சைக்கிள்களில் பிரதான விளக்கு இன்மை அல்லது அது ஒளிரவிடப்படாமை, பின் பக்கத்தில் அடையாளப்படுத்தும் விளக்குகள் எவையும் இல்லாமை, இரவு நேரங்களில் ஓட்டுநர்கள் கடும் நிறங்களிலான ஆடைகளை அணிந்து பயணிப்பது, சமிக்ஞை விளக்குகளை கவனத்தில் கொள்ளாது பயணிப்பது, பாதைகளின் குறுக்காக பயணிக்கும் போது எதிரே வரும் வாகனத்தின் வேகத்தை உணராது பயணிப்பது போன்றன இந்த சைக்கிள் ஓட்டுநர்கள் விபத்துக்களில் சிக்க காரணங்களாக பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் கண்டறியப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் சைக்கிள் பாவனை அதிகரித்துள்ள பின்னணியில், சைக்கிள்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளமையுடன், இரவு நேரங்களில் பயணிக்கும் போது இளம் நிறங்களிலான ஆடைகளை அணிந்து பயணிப்பது, சைக்கிள்களில் பின் பக்கம் அடையாள விளக்குகளை பொருத்துவது போன்ற ஓட்டுநர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# நுவரெலியா பிரதேச சபைத்தலைவர் வேலு யோகராஜா கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம்

## இ.தொ.கா அறிவிப்பு

நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் வேலு யோகராஜா கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உத்தியோகபூர்வ கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இ.தொ.கா. அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இ.தொ.கா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது –

பிரதேச சபைத் தலைவர் மீதான அரச காணி மோசடி குற்றச்சாட்டு தொடர்பாக கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைக்குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆதாரங்களின் உண்மைத் தன்மை ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் அவர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

---

நியமிக்கப்பட்டமையை ஆட் சேபித்து

## உயர்நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று நீதியரசர்கள் பிரியந்த ஜயவர்த்தன, யஸந்த கோட்டாகொட, அர்ஜுன ஒபயசேகர ஆகியோரைக் கொண்ட ஆயம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் நேற்று நீதிமன்றம் மனுதாரர்கள் தரப்பு வாதங்களைச் செவிமடுத்தது.

மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், ஏனைய மூன்று மனுக்கள் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னான்டோ, விரயன் கொரயா, ஜெவ்றி அழகரட்ணம் ஆகியோரும் வாதிட்டனர். மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டீ சில்வா மற்றும் காமினி மாரப்பன ஆகியோர் முன்னிலையாகினர்.

நேற்று மாலை இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்ற பரிசீலனை முடிவடையாத நிலையில், இன்று நாடாளுமன்றத்தில் தம்மிக பெரேரா எம்பியாக சத்தியப்பிரமாணம் செய்வதைத் தடுக்கும் விதத்தில் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் நேற்று மாலை மன்றைக் கோரினர். நீதிமன்றமும் அதை சாதகமாக பரிசீலித்து இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்குவதற்கு தயாரானது. எனினும் எதிர் மனுதாரரான தம்மிக பெரேரா சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டீ சில்வா, தமது கட்சிக்காரர் நீதிமன்றம் இந்த மனுக்களைப் பரிசீலனைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் ஒரு முடிவு எடுத்துக் கட்டளை பிறப்பிக்கும் வரை எம்.பி. பதவியையோ அல்லது அமைச்சர் பதவியோ ஏற்க மாட்டார் என்றும், எம்.பிக்குரிய எந்த செயற்பாட்டையும் முன்னெடுக்க மாட்டார் என்றும் உறுதியளிக்கிறார் எனத் தாமாகவே நீதிமன்றுக்கு முன்மொழிந்தார். அதை நீதிமன்றம் நேற்றைய கட்டளையாகப் பதிந்து கொண்டு, வழக்கை இன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தவறுகளைத் திருத்த வாய்ப்பு

சட்டத்துக்கு முரணாக – மாறாக – ஒரு விடயம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் – அல்லது இழைக்கப்பட்டு வருவதால் – அந்தத் தவறான நடைமுறை சட்ட ரீதியானதாகி விடாது. என்றோ ஒரு சமயத்தில், தகுதியான மன்றில், உரிய முறையில் விடயம் சுட்டிக்காட்டப்படும் போது அது திருத்தப்பட்டேயாக வேண்டும். அதுதான் சட்ட ஒழுங்கு.

இலங்கையின் பொதுத் தேர்தல் முறைமை ஒன்று தொடர்பாக 25 வருடங்களுக்கு மேலாக இழைக்கப்பட்டு வரும் ஒரு தவறு – அல்லது பிழை – அப்படித் திருத்தப்படும் ஒரு வாய்ப்பு இப்போது கிட்டியுள்ளது.

அது, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் நியமனம் பற்றிய சர்ச்சையாகும். 1988 மேயில் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 14ஆம் திருத்தத்தின் கீழான விவகாரம் இது.

அந்த அரசமைப்புத் திருத்தம் அப்போது ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றத்தின் முன்னால் பரிசீலிக்கப்பட்டது. பொதுத் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர், தேசியப் பட்டியலுக்கான வேட்பாளர் பட்டியலை கட்சிகள் சமர்ப்பித்து விட வேண்டும் என்பதும், அப்போதுதான் வாக்காளர்கள் தங்கள் வாக்குகள் மூலம் தெரிவாகக் கூடியவர் யார் என்பதை அறிந்து வாக்களிக்க முடியும் என்பதும் உயர் நீதிமன்றத்தினால் அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட 14ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூல வரைவில் அந்த விடயம் இல்லை என்பதை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அரசுத் தரப்பில் அப்போது மன்றில் முன்னிலையாகியிருந்த சொலிஸிட்டர் ஜெனரல் கே.எம்.எம்.பி. குலதுங்க நீதிமன்றத்தின் அந்தக் கருத்தை ஒப்புக் கொண்டார். அதனடிப்படையில் அரசமைப்பின் 14ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட சமயம், குழு நிலை ஆராய்வின் போது அந்த அரசமைப்பு வரைவில் நீதிமன்றம் சுட்டிக் காட்டிய அந்தத் திருத்தம் செய்யப்பட்டது – ஒரு கட்சியின் தேசியப்பட் டியல் வேட்பாளர்கள் அணி, வேட்பு மனு நியமனத்துடன் சமர்ப்பிக்கப்பட்டு விட வேண்டும் என்ற திருத்தமும் அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அரசமைப்புச் சட்டம்தான் நாட்டின் மீயுயர் சட்டம். அந்தச் சட்டத்தையே நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று வெளிப்படையாக கூறும் ஒரே நாடு இலங்கைதான். சட்டத்தின் ஆட்சியைக் கேலிக் கூத்தாகும் அரசைக் கொண்ட பிரதான தேசம் இலங்கைத் தீவுதான். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மூலம் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்பட்டு 35 வருடங்களாகி விட்டன. ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்தவே மாட்டோம் என்று ஆளும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் உன்மத்தமாக – திமிர்த்தனமாக – பிடிவாதமாக – இருந்து வருகின்றன. அரசமைப்பை நடைமுறைப்படுத்த வெளிப்படையாக மறுக்கும் இந்த அரச அடாவடித்தனத்தைக் கேட்பார், விசாரிப்பார் யாருமில்லை.

அதேபோன்றுதான் தேசியப்பட்டியல் வேட்பாளர் விவரம், வேட்பு மனுவுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற அரசமைப்பு ஏற்பாடும் சரியாகப் பின்பற்றப்படவில்லை.

பின்னர் பிரதமரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, சரத் பொன்சேகா, விஜேதாஸ ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ என வேட்பாளர் பட்டியலில் பெயர்கள் இல்லாதவர்கள் எல்லோரும் தேசியப் பட்டியல் மூலம் பின் கதவால் எம்.பிக்களாகினர். அக்காலங்களில் அவற்றைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தி நீதியான தீர்ப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் இப்போது, கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக பெரேரா மொட்டுக் கட்சியின் எம்.பியாகப் பின்கதவால் நுழையும் முயற்சி சரியான சமயத்தில் – உரிய தரப்புகளினால் – சட்டச் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. உயர்நீதிமன்றுக்கும் வரலாற்றில் முன்மாதிரித் தீர்ப்பு ஒன்றை வழங்க வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

# வரிசையில் பல மணிநேரங்களை செலவிடும் மக்களின் விரக்தியை புரிந்து கொள்ளுங்கள்!

### ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி பாதுகாப்புத் துறையினரிடம் கோரிக்கை



தமது அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்டவரிசையில் பல மணி நேரங்களை செலவிடும் மக்களின் விரக்தியைப் பாதுகாப்பு துறையினர் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு – விசுவமடு பிரதேசத்தில் 18 ஆம் திகதி சனிக்கிழமை இரவு எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றுக்கு அருகில் இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலையடுத்து அங்கு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்காக இராணுவத்தினரால் வானை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே இந்த சம்பவத்தை மேற்கோள்காட்டி செய்துள்ள டுவிட்டர் பதிவில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பதிவில் –

“எரிபொருள் வரிசைகளில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருடன் தொடர்புடைய வன்முறையின் படங்கள் சிக்கலுக்குரியவை.

“நீண்ட வரிசையில் பல மணிநேரங்களைச் செலவிடும் மக்களின் விரக்தியைப் புரிந்துகொள்ள பாதுகாப்புத் துறையினரைக் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்பு துறையினர் உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு உரிய அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாவின் தன்னிச்சையான முடிவுகளே நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணம்!

### சந்திம வீரக்கொடி சாடல்



முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கும் தீர்மானத்தை நாடாளுமன்றம் எடுக்கவில்லை, ஜனாதிபதியே தன்னிச்சையான முறையில் தீர்மானங்களை முன்னெடுத்தார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை வரையறைக்குட்படுத்தாமை நாடாளுமன்றத்தின் தவறு என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

காலியில் 18 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

எரிபொருள் வரிசையில் நிற்கும் மக்கள் முழு அரசியல் கட்டமைப்பையும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். பாதுகாப்புத் தரப்பினருக்கும், பொது மக்களுக்குமிடையில் அமைதியற்ற தன்மை காணப்படுகிறது.

நாடு தற்போது பல்துறைகளில் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு நாடாளுமன்றம் பொறுப்புக்கூற வேண்டும் என பொதுமக்கள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான எந்தத் தீர்மானத்தையும் நாடாளுமன்றம் எடுக்கவில்லை.

முழுநாட்டையும்நெருக்கடிக்குள்ளாக்கும் தீர்மானத்தை ஜனாதிபதியே தன்னிச்சையான முறையில் எடுத்தார்.

நிறைவேற்றுத்துறை அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை வரையறைக் குட்படுத்தாமை நாடாளுமன்றத்தின் தவறு . இத்தவறு அரசமைப்பின் 21ஆவது திருத்தம் ஊடாக திருத்திக்கொள்ளப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளோம். அரசியல் நெருக்கடிக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள தீர்வை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சிறந்த அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். – என்றார்.

# எரிபொருள் நிரப்பு நிலைய அமைதியின்மையை குறைந்த பலபிரயோகத்துடன் கட்டுப்படுத்துக!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை

நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில், அமைதியின்மை ஏற்படுமாயின், குறைந்த பட்ச பலப் பிரயோகம் செய்து நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போதே இந்த ஆலோ சனைகள் வழங்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் வன்முறைகளை நோக்கிய சம்பவங்கள் பதிவாகும் போது, அப்பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் நோக்கிலேயே இந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என இந்த கலந்துரையாடலின் போது அறிவுறுத்தப்பட்டதாக அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அவசியம் ஏற்படுமாயின், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் அமைதியின்மையைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரின் உதவியை பெற்றுக்கொள்வும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரதமர் மோடியின் முன்முயற்சியில் உருவான சர்வதேச யோகா தினம்

## இந்தியாவின் 75 ஆவது சுதந்திர ஆண்டில் இன்று 75 நகரங்களில் யோகா நிகழ்வுகள்

**அமெரிக்காவில் ஆர்வம்**

**சர்வதேச யோகா தினத்தையொட்டி, அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் சார்பில், வொஷிங்டனில் சிறப்பு யோகா பயிற்சிக்கு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், அமெரிக்க அதிகாரிகள், செனட் உறுப்பினர்கள், தொழில் துறையினர், இந்திய வம்சாவளியினர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். அமெரிக்காவின் தேசிய அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் சேதுராமன் பஞ்சநாதன் கௌரவ விருந்தினராக பங்கேற்றார். அவர் கூறுகையில், "சர்வதேச நாடுகளுக்கு இந்தியா அளித்த பரிசு தான் யோகா," - என்றார்.**

ஐ.நா. சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 21 ஆம் திகதியை –இன்றைய தினத்தை – சர்வதேச யோகா தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்தது.

அதன்படி கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் ஜூன் மாதம் 21 ஆம் திகதி முதல் சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள யோகா அவசியம் என்றே கூறலாம். யோகா என்பது மதம் சார்ந்த பயிற்சி அல்ல. அது, நமது முன்னோர்கள் உலகிற்கு வழங்கிய அற்புதமான கலை என்று கூட கூறலாம்.

மேலும் யோகா பயிற்சி செய்வதால் மாணவர்கள் கவனச்சிதறல் இன்றி கல்வி கற்கலாம். இந்தியாவின் புராதன பொக்கிஷமான யோகாவை, உலகம் முழுவதும் கொண்டு சேர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி உலகம் முழுவதும் வாழும் மக்கள் பழைமை வாய்ந்த யோகாசனங்களை செய்து பயன்பெற வேண்டும் என்பதற்காக அதற்கு ஒரு நாளை சர்வதேச தினமாக அறிவிக்க வேண்டும் என்று கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா. சபைக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அதை ஏற்றுக்கொண்ட ஐ.நா. சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினம் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்தது. அதன்படி கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஜூன் மாதம் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி டெல்லியில் பிரமாண்ட விழா நடந்தது. இதில் 191 நாட்டு பிரதிநிதிகளுடன் பிரதமர் மோடியும் கலந்து கொண்டு யோகாசனம் செய்தார்.

இதைத்தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு சண்டிகரிலும், 2017 ஆம் ஆண்டு லக்னோவிலும், 2018 ஆம் ஆண்டு டேராடூன் நக



ரிலும், 2019 ஆம் ஆண்டு ராஞ்சியிலும் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

சர்வதேச யோகா தினத்தை அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளும், கடைப்பிடிக்க வேண்டும் என இந்தியப் பல்கலைக்கழக மானியக்குழு உத்தரவிட்டுள்ளது.

யோகா பயிற்சியை ஒவ்வொருவரும் தினமும் செய்ய வேண்டும். யோகா பயிற்சி செய்வதால் கிடைக்கும் பலன்கள் அளவிட முடியாதவை. யோகா பயிற்சியை உங்கள் வாழ்வின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு நன்மையை தரும் என்று பிரதமர் மோடி தொடர்ந்து, அறிவுறுத்தி வருகிறார்.

மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்த யோகா வழிகாட்டும். ஆரோக்கியம், ஆனந்தம், அமைதி இவற்றில் எதைத் தேடினாலும் அதற்கு யோகா தீர்வு தரும்.

உலகில் வெற்றி பெற வேண்டும் என்றாலும், உள்நிலை மாற்றம்தான் நோக்கம் என்றாலும் யோகா பயிற்சிகள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை களைந்து வாழ்வை மிக சுலபமாய் கையாள வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

யோகா பயிற்சி மேற்கொள்வது, முதுகுத்தண்டை வலுப்படுத்தவும், சமநிலைப்படுத்தவும் செய்கிறது. ஞாபக சக்தி, மனம் குவிப்பு திறன், செயல்திறன் போன்றவை மேம்படுகிறது. உடல், மனம் மற்றும் உணர்ச்சி நிலைகள் உறுதியடைகின்றன. முதுகு வலி, மன அழுத்தம், பயம், கோபம் ஆகியவற்றில் இருந்து விடுதலை கிடைக்கிறது. நாட்பட்ட நோய்களில் இருந்து நிவாரணம் அளிப்பதோடு, ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது. வேலை செய்யும் இடத்தில், குழுவாக பணியாற்றும் திறன் மற்றும் தகவல் பரிமாறும் திறன் மேம்படுகிறது. அமைதியும், ஆனந்தமும், நீடித்து நிலைத்திருக்க செய்கிறது.

சர்வதேச யோகா தினத்தையொட்டி, இன்று நாடு முழுதும், 75 முக்கிய நகரங்களில் சிறப்பு யோகா நிகழ்ச்சிகள் இந்திய மத்திய அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் மைசூரில் நடக்கும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். இந்தியத் திருநாட்டின் 75 ஆவது சுதந்திர தினம், இந்தாண்டு முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி நாடு முழுதும், 75 நகரங்களில் பிரமாண்டமான யோகா நிகழ்ச்சிகளுக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

கர்நாடக மாநிலம் மைசூரில் உள்ள அரண்மனையில் நடக்கும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, பொதுமக்களுடன் இணைந்து யோகா பயிற்சி செய்கிறார்.

அப்போது, இதற்கு முந்தைய யோகா தினங்களில் நடந்த சிறப்பம்சங்களின் தொகுப்பு, 'வீடியோ' வெளியிடப்படுகிறது.

இதுபோல் நாட்டின் பிற பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளில், மத்திய அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

'மனிதகுலத்துக்கான யோகா' என்பது, இந்தாண்டுக்கான சர்வதேச யோகா தினத்தின் கருப்பொருள். கொரோனா காலத்தின்போது ஏற்பட்ட துயரங்களை தணிப்பதில், யோகா எவ்வாறு மனிதகுலத்துக்கு சேவை செய்தது என்பதை விளக்கும் வகையில், இந்த கருப்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

யோகா தினத்தையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:–

"தொற்றா நோய்களும், வாழ்க்கை முறை சிக்கல்களால் ஏற்படும் உடல்நல சீர்கேடுகளும், இளம் வயதினரிடம் பெருகி வரும் சூழலில், யோகா கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. சிறந்த ஆரோக்கியத்திற்கும், நலனுக்கும் யோகா பயிற்சி செய்யுங்கள்." –இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு.போதனா வைத்தியர்கள், தாதியர்கள் எரிபொருள் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்!





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவோர் நேற்று (திங்கட்கிழமை) எரிபொருள் வழங்கக் கோரி மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையிலிருந்து ஆர்ப்பாட்ட பேரணியாகச் சென்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியநிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரதுறை ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று மதிய உணவு நேரத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை முன்பாக ஒன்றுகூடியவர்கள் அங்கிருந்து கோவிந்தன் வீதியூடாக மட்டக்களப்பு நகரை அடைந்து மட்டக்களப்பு நகர் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை முற்றிகையிட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மாவட்ட செயலகத்தில் ஐந்து சுகாதார துறைசார்ந்தவர்கள் அழைக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் பேச்சு நடாத்தப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவோருக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு தினத்தை ஒரு நிலையத்தில் ஏற்பாடுசெய்துதருவதாக வழங்கப்பட்ட உறுதிமொழியையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

எனினும் தாங்கள் தொடர்ச்சியாக கோரிக்கையை முன்வைத்துவந்த போதிலும் மாவட்ட நிர்வாகம் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் செயற்பட்டு வந்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அத்தியாவசிய தேவையாக கருதப்படும் சுகாதார சேவையில் ஈடுபட்டு வருவோர் வந்துசெல்வதற்கான எரிபொருள் மிக அத்தியாவசியமானது எனவும் அவ்வாறு எரிபொருள் வழங்காவிட்டால் வைத்தியசாலையில் நோயாளர்களைப் பராமரிப்பதில் பாரிய சிக்கல்நிலைகள் ஏற்படும் எனவும் இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சார்பில் வைத்தியர் மதனழகன் தெரிவித்தார்.

## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஜூலை 22 ஆம் திகதி திறக்கப்படும்!

### கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவிப்பு





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவ பாதை யாத்திரைக்கான காட்டுப்பாதை எதிர் வரும் ஜூலை மாதம் 22 ஆம் தேதி திறக்கப்பட இருப்பதாக கதிர்காமம் கந்தன் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவித்தார்.

ஜூலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்படும் காட்டு பாதை ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி மீண்டும் பூட்டப்படும்.

இந்த காலப்பகுதிக்குள் பாதயாத்திரிகர்கள் காட்டுப் பாதை வழியாக கதிர்காமத்துக்கு வந்து சேரலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

கதிர்காமம் ஆடிவேல் விழா திருவிழாவிற்கு வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து இம்முறை ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்துக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையொட்டி இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

திருவிழாவில் கலந்துகொள்வதற்காக வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து வரும் யாத்ரீகர்கள் குமண மற்றும் யால வன பூங்காக்களை ஜூலை 22 முதல் ஓகஸ்ட் 05 வரை திறக்க அனுமதிக்கப்படுவார்கள்.

கதிர்காமம் தேவாலயத்தின் 2022 எசல திருவிழா ஜூலை 29 முதல் ஓகஸ்ட் 11 வரை நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த பாதயாத்திரை குழுவினர் தற்போது திருகோணமலை மாவட்டத்துக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமை மீறல்களுக்கான நீதியைத் தாமதிப்பது பொறுப்புச் சொல்வதில் அரசை விடுவிப்பதாக அமையும்!

### அரசியல் கைதியின் தாயாரின் அஞ்சலியில் நிரோஷ்



தமிழ் மக்களுக்கு எதிராக அரசால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கு நீதிகேட்டு போராடும் தாய்மார் நீதி கிட்டாமலேயே படிப்படியாக மரணித்துப்போகும் அவலம் தொடர்கின்றது. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி. மீறப்பட்ட மனித உரிமைகளுக்காக ஆட்சியாளர்களுக்கு அளிக்கப்படும் கால அவகாசம் பொறுப்புச் சொல்லுதலில் இருந்து அரசை விடுவிப்பதற்கான உத்தியாகவே அமைகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அரசியல் கைதி பார்த்திபனின் தாயாரின் இறுதிச் சடங்கு ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. அங்கு அஞ்சலியுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

போருக்குப்பின் 13 ஆண்டுகளாகியும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறப்படவில்லை. கடந்த 26 ஆண்டுகளாக பிள்ளையை அரசியல் கைதியாக பிரிந்து அந்தப் பிள்ளையின் விடுதலைக்காகப் போராடிய தாய் இன்று மரணித்துள்ளார். அதுபோன்று கடந்த வாராம் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் சகாதேவன் நிலக்சனின் தாயார் மரணமடைந்தார். அவரும் படுகொலை செய்யப்பட்ட மகனுக்காக நீதி கேட்டு போராடிய தாய் ஆவார்.

இதுபோன்று 2000 நாள்களை அண்மித்து நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய் தந்தையரும் நீதி கிட்டாமலேயே போராட்டக்கொட்டில்களிலேயே மடிந்து போகும் அபாயத்தைக் காண்கின்றோம். இவ்வாறு சாவடைவோர் பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்காத காரணமாக உடல் உளரீதியில் நலிவடைந்தே மாண்டு போகின்றனர்.

இவ்வாறாக நிலைமை மோசமடைகின்றது. இந்தத் தாயின் மகன் பயங்கரவாதத் தடைச் சட்டம் காரணமாக 26 ஆண்டுகளாக சிறையில் நீதியின்றி விடுதலைக்காக ஏங்குகின்றார். அவர் தண்டிக்கப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மனித உரிமைகளை நசுக்கும் காட்டுமிராண்டித்தனமான சட்டம் என உலகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான அநீதியான சட்டங்களின் வாயிலாகவே அப்பாவிகள், அல்லது சிறு குற்றங்களுடன் தொடர்புபட்ட தமிழ் இளையோர் சிறைகளில் தசாப்தக்கணக்கில் சித்திரவதை செய்யப்படுகின்றனர். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் முழுமையான நேர்மையைப் பின்பற்றவில்லை.

பாதிக்கப்பட்ட தாய்மார்களே நீதிக்காக விட்டுக்கொடுப்பின்றி போராடுகின்றனர். அவர்களே அரசுக்கு எதிரான சாட்சியமாகவும் காணப்படுகின்றனர். தசாப்தக் கணக்கில் நீதி கிட்டாது தாய்மார் மாண்டு போவது அரசாங்கத்தை பொறுப்புக் கூறலில் விடுவிக்கும் நிலைமையாகவே அமையும் என்பதை சர்வதேசம் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு தேவை; தேர்தல் நடத்துவது தற்போது முக்கியமல்ல

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 21

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது, மக்களை கஷ்டங்களில் இருந்துவெளியேகொண்டுவருவதுதான் முக்கியம் மாறாக தேர்தல் நடத்துவது அல்லது ஆட்சியின் அமைப்பை மாற்றுவது அல்ல என்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற கட்சியின் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சியினுடைய பொதுச்சபை கூடி பல விடயங்களை ஆராய்ந்திருந்தோம். குறிப்பாக கட்சிக்குள் இருக்கக் கூடிய முரண்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தோம். அத்தோடு வன்னி தேர்தல் மாவட்ட மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

எரிபொருள் தொடர்பாக இந்தியா வழங்கிய கடன் முடிவடைந்துள்ளது. மேலும் இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளதா என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது –

அரசாங்கம் வெவ்வேறு பேச்சுகளை நடத்தியது. இது தொடரும். இந்திய நாடாளுமன்றத்திலே வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் காத்திரமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவும் வேலையை முன்னெடுக்கவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார் – என்றார்.

எதிர்க்கட்சிகள் நாட்டின் பொருளாதார சிக்கல் காரணமாக தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என கூறி வருகின்றனர். இது தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன என வினவிய போது –

இன்றைய சூழலில் தேர்தல் முக்கியமில்லை, குறிப்பாக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, மக்களை கஷ்டங்களில் இருந்து வெளியே கொண்டு வருவதுதான் முக்கியம் மாறாக தேர்தல் நடத்துவது அல்லது ஆட்சியின் அமைப்பை மாற்றுவது அல்ல எனத் தெரிவித்தார்.




# இந்துமதத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் யோகக்கலையின் சிறப்புகள்

இந்து தத்துவமரபின் வழி முகிழ்த்த அரும்பெரும் தத்துவவியலாக நோக்கப்படும் யோகக் கலையின் தாற்பரியத்தை தற்கால அறிவியல் யுகம், நன்கு உணர்ந்திருக்கிறது. தற்காலத்தில் இக்கலையைப் பற்றியதான புரிதல்கள் – அக்கறைகள் – சர்வதேச அரங்கில் மேலெழுகை பெற்றிருக்கின்றமையால்தான் ஐ.நா. உயர் சபை வரை அது எதிரொலித்துள்ளது. இது இந்து மதம் சார் கலையொன்றிற்குக் கிடைத்த அதியுயர் கௌரவமாக அமைகின்றது.

நவீன மருத்துவவியலே வியக்குமளவிற்கு பாரம்பரிய மருத்துவ விஞ்ஞானமாகிய இக்கலை, சகலவிதமான உடல், உள ரீதியான நோய்களையும் குணமாக்கும் திறனை அதிகமாகப் பெற்றிருக்கின்றமையே சர்வதேசத்தை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

இத்துணை சிறப்புக்களையுடைய யோகம் எனும் விடயப் பரப்பு விசாலமானது. இதற்குள் இருக்கக் கூடியதான மெஞ்ஞான அறிவியல் விடயங்கள், நவீன விஞ்ஞானரீதியான கொள்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகின்றதெனில் அதில் தவறிருக்க முடியாது.

யோகம் எனும் சொல் ஆழ்ந்த பொருள் தத்துவத்தை எமக்குணர்த்தி நிற்கிறது.'யுஜ்' எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின், இணைத்தல் அல்லது ஒன்று சேர்த்தல் என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய கருவிகளையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாக விளங்குகிறது.

இதனை இன்னொரு விதமாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை – வாழ்வியல் ரீதியான விடயங்களை – போதிக்கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிஷமான இக்கலையைச் சூத்திர வடிவில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார். இவரால் யாக்கப்பெற்ற யோக சூத்திரங்களே மூல நூலாக கொள்ளப்படுகின்றன.

இற்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாக நம்பப்படும் இக்கலையின் தோற்றம் பற்றிக் கருத்துரைப்பதானது விவாதத்திற்குட்பட்ட வகையாலும் உறுதியான எழுத்தாவணங்கள் இன்மையாலும் இது பற்றிய ஆய்வை மேற்கொள்வது கடினமானது. காரணம், சனாதன தர்மம் எனப்போற்றிச் சிறப்பிக்கப்படுகின்ற இந்துமதத்தின் தோற்றக்காலத்தைச் சரியாக கணிப்பதும் வரையறைக்குட்படுத்துவதும் முடியாத காரியம்.

எனவே ஆதியாய், அனாதியாய் விளங்கும் இந்து மதமானது திடமான கால தேச வர்த்தமான வரையறைகளுக்கப்பாற்பட்டதாகவே விளங்குகிறது. ஊகத்தின் அடிப்படையில் அமைந்த தொல்லியலாராய்ச்சிச் சான்றாதாரங்கள் வெளிப்படுத்தி நிற்கும் முடிவுகளின் படி சிந்துவெளி நாகரிகத்துடனே இந்துமதத்தின் வழிபாட்டியல் சார்ந்த தோற்றமும் ஆரம்பமாவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து நேரிடையாக நோக்கின் மிகப்புராதனமான இந்துமதத்தின் வேரிலிருந்து முகிழ்த்தெழுந்த யோகக்கலையும் சிந்துவெளியுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும் என்ற வாதமும் வலுக்கொள்வது தவிர்க்க முடியாது.

அந்தவகையில் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் தியான நிலையிலுள்ள யோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை இக்கலை மிகவும் பழைமையானது என்ற முடிவுக்கு வலுச்சேர்க்கிறது.

தொடர்ந்து வந்த வேதகாலம் மற்றும் புராண, இதிகாச காலங்களில் இக்கலை பற்றியதான குறிப்புக்களைப் பரவலாகக் காணலாம். வேதாந்த, சித்தாந்த தத்துவங்கள், சாங்கிய, வைசேடிக தத்துவங்கள் மற்றும் பிரம்ம சூத்திரம் போன்ற பல தத்துவங்களிலும் யோகத்திற்கு காத்திரமான முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது. பகவத்கீதையில் 6 ஆம் அத்தியாயத்தில் யோகத்தைப் பற்றிய ஏராளமான அம்சங்கள் உள்ளடங்கியிருக்கின்றமை குறிப்பிடற்பாலது.

யோகமார்க்கத்தை பயிற்சிமுறையினை அடிப்படையாகக்கொண்டு இருவகையாக பிரித்து நோக்கலாம். முதல்வகை உடல் சார்ந்தது. மற்றையது மனம் சார்ந்தது.

இங்கு உடலை அடிப்படையாகக் கொண்ட யோகப் பயிற்சிகளை மேலும் இருவகையினதாகப் பகுக்கலாம். 1.ஹட யோகம். 2.லய யோகம்(குண்டலினி யோகம்)

தற்காலத்தில் அதிக கவனிப்புக்குரியதாக விளங்கும் ஹட யோகம் பற்றியதான விடயமானது 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யோகியான ஸ்வாத்மராமாவின் 'ஹடயோகப்பிரதீபிகா' எனும் நூலில் விளக்கப்பட்டுள்ளது. அதாவது ஆசனப்பயிற்சிகள் அனைத்தும் இதற்குள் அடங்குகின்றன. மனம்சார் யோகப்பயிற்சி முறைகள் மூவகைப்பட்டன. அவை 1.கர்மயோகம் 2.பக்தி யோகம் 3.ஞான யோகம் என்பவையாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்திய யோகத்தை இராஜ யோகமுறைக்குள்ளடக்கப்படுகிறது. யோகக்கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜ யோகமுறைக்குள்ளேயே வருகின்றது.



பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப்பிடித்த யோக முறையானது பதஞ்சலி மாமுனிவரால் யாக்கப்பெற்ற இராஜ யோகமுறையை அடியொற்றியதாகும். இது உடல், மனம், ஆன்மா ஆகிய-வற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது ஆன்மா விடுதலையடைந்து ஆனந்த நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும்.இது மனிதனது உடல், உள, ஆத்மிக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையை அடைதல் ஈறான வாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாக விளக்குகின்றது.

இராஜ யோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப் பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டுவகையான வாழ்வியற் படிமுறைகள் காணப்படுகின்றன. இது பற்றிய விளக்கத்தை மிகச் சுருக்கமாக நோக்கும்போது,

1. இயமம் – தீயவற்றை விட்டொழித்தல் (கொல்லாமை, பொய்கூறாமை, களவுசெய்யாமை, காமமின்மை)
2. நியமம் – நன்றாற்றல் (பிறருக்கு உதவுதல், பரோபகாரம், தூய்மையுடைமை, வாய்மை, தவம் புரிதல்)
3. ஆசனம் – இருக்கை நிலை (உடல் நன்நிலையடைதலுக்கான உடல்சார்ந்த பயிற்சிமுறைகளை செய்தல்)
4. பிராணாயாமம் – சுவாசத்தை சீராக்கம் செய்தல் (பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)
5. பிரத்தியாகாரம் – ஐம்புலன்களையும் புறவுலகப் பொருள்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்
6. தாரணை – மனதை ஒருநிலைப்படுத்தல்
7. தியானம் – மனதைக் கட்டுப்படுத்தி எடுத்துக் கொண்ட பொருள் மீதான உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல், தெளிதல் நிலைதிரியா மனதினைப் பெறல்
8. சமாதி – உணர்வொடுங்கிய நிலை அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச)நிலை

அண்டத்திலிருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது எனும் கருத்துருவே சித்தர்கள் வகுத்த யோகநெறியின் மையக்கருத்தியலாக அமைகிறது. அதாவது அண்டம் என்றால் உலகம் எனவும் பிண்டம் என்பது நமது உடல் எனவும் கொண்டு, அண்டமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்ஆகியஐம்பூதங்களின்சேர்க்கைகளாலானது. இதுபோலவே உடலிலும் ஐம்பூதங்களின் ஆதிக்கமானது நிலைபெற்றிருக்கிறது. இங்கு நிலம் – பருஉடல், நீர் – இரத்தம் மற்றும் சீல் போன்ற திரவம், தீ – உடல் வெப்பநிலை, காற்று – பிராணன் முதலிய தச வாயுக்கள், ஆகாயம் – மனம் போன்றவற்றைக் குறிப்பதாக அறியப்படுகிறது. இந்தப் பருவுடலானது மண்ணிலிருந்து தோன்றி உயிரடங்கப் பெறுகையில் ஈற்றில் மீண்டும் மண்ணுக்கே திரும்புகிறது. அதனால்தான் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் இருக்கிறது என யோகிகள் குறிப்பிடுகின்றனர். இதன்மூலம் மனித வாழ்வியல் இயற்கையுடன் பின்னப்பட்டிருக்கிறது என்ற விடயம் இழையோடியுள்ளது. இருப்பினும் தற்கால நவீனத்துவமான சூழலில் இயற்கையினின்றும் வழுவியதான – இயற்கையை விரோதிக்கும் வாழ்க்கை முறையை வாழத்தலைப்பட்டதனாலேயே நமது வாழ்க்கையில் இத்துணை இடர்ப்பாடுகளையும் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது. இங்கு யோகமானது இயற்கையை ஆராதிக்கின்றது என்பதற்குச் சான்றாக 'சூரியநமஸ்காரம்' என்ற இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற பயிற்சிமுறையைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இறுதியாக, தமக்கேயுரித்தான நீண்ட – நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தையும் தனித்துவமான வாழ்வியல் அடையாளங்களையும் பேணி உலகிற்கே எடுத்துக்காட்டாக விளங்கிய நம் சமூகத்தின் தற்போதைய நிலையானது பரிதாபத்திற்குரியதாகவே விளங்குகிறது. இந்நிலையில், நமது பண்பாட்டு வேர்களையும் அடையாள இருப்புகளையும் உறுதிசெய்து, அடுத்த சந்ததிக்கும் அளிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம்முன் விரிந்திருக்கிறது. அதனொரு கட்டமாக, இந்துப் பண்பாட்டியலின் வழித்தோன்றலான யோகக் கலையின் தனித்துவத்தையும் இருப்பையும் பேண்தகு நிலையில் நிலைபெறச் செய்யவேண்டியது கட்டாயமாகிறது. இன்று நவீன மருத்துவவியலுக்கே சவால் விட்டுவருகின்ற குணப்படுத்த முடியாத பலவிதமான உடல், உள ரீதியான நோய்களைக் குணமாக்கும் திறன் யோகப் பயிற்சிகளுக்கு உண்டென்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையால் இக்கலையின் மீதான நாட்டம், ஆர்வம், தேடல்கள் சர்வதேசமெங்கும் பெருகி வரும் நிலையில், நாமோ மேலைத்தேய மக்களது கலாசாரக் குப்பைகளை இறக்குமதி செய்தும் அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளை பின்பற்றியும் பக்கவிளைவுகள் அதிகம் நிறைந்த மருந்துவகைகளை பயன்படுத்தியும் வருவதால் பல்வேறுவிதமான உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறோம்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய பரீட்சைகளை ஒத்திவைக்க முடிவு!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்



நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாரம் கல்விச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை, புலமைப்பரிசில் மற்றும் சாதாரண தர பரீட்சைகளை ஒத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சைகள் மற்றும் ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை ஒக்ரோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கும் , டிசெம்பரில் இடம்பெற வேண்டிய கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைகளை 2023 பெப்ரவரியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஏற்கனவே திட்டமிட்ட படி பாடசாலை செயற்பாடுகளைத் தொடர்ந்தும் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

200 இற்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளில் போக்குவரத்து சிக்கல் மிகக் குறைவாகும். எனவே அவ்வாறான பாடசாலைகளை நடத்திச் செல்வதில் சிக்கல் ஏற்படாது என்று எதிர்பார்க்கின்றோம்.

எனினும் நகர்ப்புற பாடசாலைகளில் அவ்வாறான நிலைமை இல்லை. எனவே அவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இணையவழிக் கற்பித்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு இணையவழி கற்பித்தலை முன்னெடுப்பதைக் கருத்திற் கொண்டு இவ்வாரம் காலை 8 மணி முதல் பகல் ஒரு மணி வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாதிருக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாடசாலைகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக மீளாய்வு மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது குறித்த வாரத்தில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்ற முறைமை தொடர்பில் அறிக்கைகள் பெறப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த வாரம் இதுகுறித்து தீர்மானிக்கப்படும்.

அத்தோடு கல்விக்காக கொவிட் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி தொலைக்காட்சி சேவைகளை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மற்றும் டிசெம்பரில் வழங்கப்படும் தவணை விடுமுறையை மட்டுப்படுத்தி பாடசாலைகளை நடத்தி பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கொவிட் காலத்திலிருந்து தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள் தொடர்பில் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பாடநூல்கள் உள்ளிட்ட கல்வித்துறை சார் அச்சுக்குத் தேவையான காகிதங்கள் அல்லது கடதாசிகள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

அடுத்த வருடத்துக்கான சீருடையில் ஒரு தொகுதியை வழங்குவதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து கல்விச் செயற்பாடுகளை வழமை போன்று முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். மேலும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகள் என்பவற்றை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் அவற்றுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் தீர்மானிக்க முடியும். இவ்வாரம் பாடசாலைகள் மூடப்படும் வாரமாகவே கருதப்படும். எனவே ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை எனில் அது அவர்களது விடுமுறையாகக் கருதப்பட மாட்டாது. – என்றார்.

# வல்லையில் வழிப்பறியில் ஈடுபட்டோர் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி வல்லைப் பகுதியில், வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு இளைஞர்கள் பொது மக்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இறைச்சி வியாபாரி ஒருவரின் 3 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்ட போது, பொது மக்களால் இவர்கள் பிடிக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில், தப்பிச்சென்ற இரண்டாவது இளைஞன் நாவல் காட்டு பகுதியில் உள்ள கோயில் கேணியில் கால் கழுவிக் கொண்டிருந்த போது சிக்கியுள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் அந்த இளைஞனிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் அழைத்துச்சென்றமையுடன், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இந்துமதத்தின் .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நம் சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான வழிவகைகளை எமக்குள்ளேயிருந்து நாமே கண்டுபிடித்து நிவர்த்திக்க வேண்டுமே தவிர, பிறர் மீது குற்றங்காண விழைவது அபத்தமாகும். இதன் மூலமே எம்மீது வரும் பழிச்சொற்களைக் களைந்து சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம். இவ்விதமான சுயமதிப்பீடுகளுக்கும் சுய விமர்சனங்களுக்குமான சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தவல்ல ஆற்றல் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு உண்டென்றவகையால் அதற்கான உந்துசக்தியாக யோகக்கலையினை மையமாக வைத்தே ஆன்மிக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதற்கான முன்முயற்சியாக கல்விக் கூடங்களில் இதனை மாணவர்களுக்குப் போதிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். காரணம், இளையோரிடத்தே அதிகரித்து வருகின்ற மது, போதைப்பொருள்கள் பாவனை, புகைத்தல் பாவனைகள் இதன் தொடர்ச்சியால் மேற்கிளம்புகின்ற பாலியல் வன்முறைகள், கொலை, களவு, குழுச்சண்டைகள், குடும்ப வன்முறைகள் முதலிய பல்வேறு சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். எனவே, நமது பாரம்பரிய கலை மரபான யோகக் கலையை இன, மத, பேதம் கடந்து பேணுவதனூடாக ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கருத்துருவாக்கச் சிந்தனையை அனைவரிடத்திலும் வலுப்படுத்திச் செயலாற்ற முன்வர வேண்டியது அவசியமாகும்.

# பொலிஸார் மென்போக்கை கடைப்பிடிப்பது கட்டாயம்!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

எரிபொருள் தட்டுப்பாடு உள்ளடங்கலாக நாட்டில் தற்போது நிலவும் இக்கட்டான சூழ்நிலை மக்களை விரக்தியடையச்செய்திருப்பதுடன், இது அவர்களிடையே கோபமும் மூர்க்கத்தனமும் உருவாவதற்குக் காரணமாகியிருக்கின்றது.

எனவே பொலிஸாரும், ஆயுதப்படையினரும் பொதுமக்களுடன் தொடர்புறும்போது கட்டுப்பாடுகளுடனும், அவதானத்துடனும் செயற்படவேண்டியதும், மக்களின் துன்பத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் மீதான பச்சாதாபத்துடன் பணியாற்ற வேண்டியதும் அவசியமாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

எரிபொருள் நிரப்புநிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் பொதுமக்கள் மீது பொலிஸாரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை, பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டமை உள்ளிட்ட அமைதியின்மைச் சம்பவங்கள் தற்போது அதிகளவில் பதிவாகி வருகின்றன.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பெற்றோல் மற்றும் டீசலுக்காக மணிக்கணக்காகவும், சிலவேளைகளில் நாள்கணக்கிலும் பல கிலோமீற்றர்களாக நீளும் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

இந்த நெருக்கடி மக்கள் எவ்வித தீர்வுமின்றி எதிர்கொண்டிருக்கும் எரிவாயு, ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை நெருக்கடிக்கு அப்பாற்பட்டதாகவே காணப்படுகின்றது.

பலர் தமது நாளாந்த வருமானத்தை இழந்திருப்பதுடன், தமது குடும்பத்தினருக்கு உணவளிக்கமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நீண்ட வரிசைகளில் காத்திருந்தமையாலும், மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டினாலும் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தொடர்பாக அறிக்கைகளும் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

நாட்டில் நிலவும் இந்த இக்கட்டான சூழ்நிலை மக்களை விரக்தியடையச் செய்திருப்பதுடன், இது அவர்களிடையே கோபமும் மூர்க்கத்தனமும் உருவாவதற்குக் காரணமாகியிருக்கின்றது.

அதன்படி நாடளாவிய ரீதியிலுள்ள பல எரிபொருள் நிரப்புநிலையங்களில் மக்கள் மத்தியில் ஏற்படும் அமைதியின்மைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

குருநாகல் மஸ்பொத எரிபொருள் நிரப்பு நிலையத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகன் ஒருவரைத் தாக்கிக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டமை மற்றும் அத்துருகிரிய எரிபொருள் நிரப்புநிலையத்தில் பதிவான வன்முறைச் சம்பவங்கள் என்பன நாடெங்கிலும் உள்ள நிலையற்ற தன்மைக்கான சில உதாரணங்கள் மாத்திரமேயாகும்.

தற்போது பொலிஸாரும், ஆயுதப்படையினரும் கடமையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள கடுமையான சூழ்நிலை தொடர்பாக நாம் அறிந்திருந்தாலும், பொதுமக்களின் ஒருபகுதியினராக இருக்கின்ற அவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இதே அழுத்தங்களையே எதிர்கொண்டிருக்கின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதுமாத்திரமன்றி பொதுமக்களுடன் தொடர்புறும்போது கட்டுப்பாடுகளுடனும், அவதானத்துடனும் செயற்படவேண்டியதும், மக்களின் துன்பத்தைப் புரிந்துகொண்டு, அவர்கள் மீதான பச்சாதாபத்துடன் பணியாற்ற வேண்டியதும் அவசியமாகும். சட்ட அமுலாக்க அதிகாரிகள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நியாயமாகவும், பாரபட்சமின்றியுமே செயற்படவேண்டும். அதற்கு மாறாகச் செயற்படுவது ஏற்கனவே மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கையின்மை மேலும் வலுவடைவதற்கு வழிவகுக்கும்.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்களின் சுமையைக் குறைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு அப்பால், இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மக்களுக்கு உறுதிவழங்குவதும், நம்பிக்கையை உருவாக்குவதுமே முக்கியமான நடவடிக்கைகள் என்ற எமது நிலைப்பாட்டை நாம் மீளவலியுறுத்துகின்றோம். அரசாங்கத்தின்மீதும், சட்ட அமுலாக்கத்தின் மீதுமான பொதுமக்களின் நம்பிக்கையீனம் நாட்டுக்குக் கடுமையான பின்விளைவுகளையே ஏற்படுத்தும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# மக்கள் ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் அவல நிலை

## இந்தச் சீரழிவு நிலைமை இந்த காலத்தில் முடியாது அம்பாறை காரைதீவில் சித்தார்த்தன் எடுத்துரைப்பு



(காரைதீவு நிருபர் சகா)

மக்கள் ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் துர்ப்பாக்கிய சீரழிவு நிலை தோன்றியுள்ளது. இந்தச் சீரழிவுகள் இந்த காலத்தில் முடிவுக்கு வரப் போவதில்லை. இது தீர்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.இதற்கு தமிழ் மக்கள் பழக்கப்பட்டவர்கள். வருவதை நம்பிக் கையோடு எதிர்கொள்ளுங்கள்.

– இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் காரைதீவில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைக் கழகத்தின் அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி அமரர் மகாதேவன் சிவனேசனின் முதலாவது ஆண்டு நினைவு நாளில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை கழகத்தின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் பி.ரவிச்சந்திரன் சங்கரி தலைமையில் நடைபெற்றது.

முதலாவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி இடம் பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் காரைதீவு ஜோலி கிங்ஸ் அணியினரை எதிர்த்து போட்டியிட்ட வீரமுனை விஷ்ணு அணியினர் வெற்றி வாகை சூடி இருந்தனர்.

பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சித்தார்த்தன் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு :-

இன்று நாட்டில் மிகவும் மோசமான பொருளாதாரச் சீரழிவு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அனைத்து மக்களும் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர் நோக்கி வருகின்றனர்.ஒருவேளை உணவுக்கும் கையேந்தி நிற்கும் துரதிஷ்டவசமான நிலைமை தோன்றி இருக்கின்றது.

இது இன்று நாளை முடிவடையப் போவதில்லை.

இதேவேளை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்கிறோம். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது விட்ட காரணத்தினால் நாடே சீரழிந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களது பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்க்கப்படவேண்டும். எமது காலத்திலே தீர்க்கப்படாவிட்டால் அடுத்த சந்ததிக்கு இது ஒத்திவைக்கப்படப் போகின்றது.

தமிழ்மக்களது கனவு நிறைவேற வேண்டும். தமிழ் மக்களது கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டுமானால் அடுத்த சந்ததியின் மனதிலும் இந்த விடயம் ஏற்றி வைக்கப் படவேண்டும்.

எண்பதுகளில் எமது கட்சியின் முக்கிய தளபதிகளில் ஒருவராகச் செயல்பட்டவர் இந்த மண்ணை சேர்ந்த பக்தன் எனும் சிவனேசன். அவர் சிறப்பாக செயல்பட்டார். இளைஞர்களிடையே மிகுந்த துணிவை ஏற்படுத்தியவர் தளபதி பக்தன். – என்றார்.

இதேவேளை இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா), வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் த.கஜதீபன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் உரையாற்றினார்.

மேலும் பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். திருமதி சிவனேசனும் கலந்து கொண்டார்.

# மக்கள் போராட்டங்கள் தீவிரமடையும் சூழ்நிலை



அரசாங்கத்திற்கு எதிராக அடுத்த வாரம் முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும், பிரதமரும்தற்போதையநிலையில்தோல்வியடைந்துள்ளனர் எனவும், இதனால் இந்த அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதே தற்போது உள்ள ஒரே தீர்வு எனவும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவது, அவர்களின் தொழிற்துறைக்கு ஏற்படுத்தப்படும் இழுக்காகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலைமை தொடரும் நிலையில், நாட்டில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலைமையே ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மக்கள் கோபமடையும் நிலை ஏற்படுமாயின், மே 9 தை விட பாரிய சிக்கல் நிலைமை நாட்டில் ஏற்படுமென நாடாளுமன்ற உறுப்பிர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# சேவையில் ஈடுபடுகின்ற ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு

பஸ் கட்டணம் அதிகரிப்பு, எரிபொருள் பற்றாக்குறை ஆகிய காரணிகளால் கடந்த காலங்களை விட தற்போது ரயில் சேவையைப் பயன்படுத்தும் பொது பயணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

பொதுப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு ரயில் சேவையில் ஈடுபடும் ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் பிரதான செயலாளர் கசுன் சாமர போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளார்.

பயணிகள் போக்குவரத்து சேவையில் நிலவும் நெரிசல் நிலைமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பூகோள மட்டத்திலான எரிபொருள் தட்டுப்பாட்டு பிரச்சினையை கருத்திற் கொண்டு நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்களை செயற்படுத்துமாறு ரயில் வேத் திணைக்களத்திடமும்,போக்குவரத்து அமைச்சிடமும் பலமுறை கோரிக்கை விடுத்துள்ள போதும் அதற்கு சிறந்த பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் முன்னரான காலப்பகுதில் நாடுதழுவிய ரீதியில் நாளாந்தம் சுமார் 420 பயணிகள் ரயில் சேவை பயணங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொவிட் தாக்கத்தின் போது ரயில் பயண சேவையில் ஈடுபடும் ரயில்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தற்போது நாடு தழுவிய ரீதியில் நாளாந்தம் 350 பயணிகள் ரயில் சேவை பயணங்கள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. தூரபிரதேரச ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்



பட்டுள்ளன.

பஸ் கட்டணம் அதிகரிப்பு,எரிபொருள் பற்றாக்குறை ஆகிய காரணிகளால் கடந்த காலங்களை காட்டிலும் தற்போது ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கமைய ரயில்கள் சேவையில் ஈடுப்படுத்தப்படவில்லை.

பொதுப் பயணிகள் பாதுகாப்பற்ற வகையில் ரயில் சேவையை பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. பொது பயணிகளின் நலனை கருத்திற்கொண்டு ரயில் சேவையில் ஒப்பீட்டளவிலாவது ரயில்களை அதிகரிக்க வேண்டும் அல்லது ரயில்களில் மேலதிகமாக பெட்டிகளை இணைக்க வேண்டும் என்பதை போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம்.

ரயில் பயணச் சீட்டு விநியோகத்தில் சிக்கல் காணப்படுகிறது. கொழும்பு கோட்டை, மருதானை, கம்பஹா, வெயாங்கொட, மாத்தறை, அளுத்கம, களுத்துறை. நாத்தாண்டிய ஆகிய ரயில் நிலையத்தின் ஊடாக ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகள் இயலுமான அளவு மாதாந்த பருவசீட்டை (சீசன்) பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறது. – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-41**

நக்கீரனையும் தருமியையும் பற்றி நான் நேற்று என் பத்தியில் எழுதியவற்றைப் பார்த்த சிலர் மனம் வருந்தி, அப்படியான நக்கீரன்கள் பலர் போராட்ட காலத்தில் உருவானார்கள் எனக் குறிப்பிட்டு, பெயர்களும் தந்து, ஆதங்கப்பட்டு என்னுடன் பேசினார்கள். அவர்களது ஆதங்கங்கள் நியாயமானவை.

இந்த நக்கீரர்களையும் தருமிக ளையும் ஒட்டி எழுதினால் அது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் இன்னும் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

போராட்டக் காலங்களில் ஆரம்பத்திலிருந்தே பாதைகளில் தெளிவு வேண்டும்என ஒவ்வொரு விடுதலை குழுவிலும் எழுந்த நக்கீரர்கள் பலர் இல்லாமல் இல்லை. அவற்றை அனேகர் அறிந்திருந்தார்கள். ஆனால் அத்தகையவர்களின் பலர் துரோகி என்றும், இயக்கங்களின் கட்டுப்பாடு எனவும் போட்டுத் தள்ளப்பட்டும், எரித்துப் பாதைகளில் விடப்படும், கடல்களில் வீசப்பட்டும் சடலங்களாகக் கிடந்தார்கள்.


நாம் குறிப்பிட்டது இவற்றைப் பார்த்து, இவை இனத்தின் விமோசனத்துக்குத் தேவையற்றவை என தமிழ் மக்கள் ஒரே குரலில் கிளர்ந்தெழுந்து நக்கீரர்களாக இவற்றைக் கட்டுப்படுத்த முயலவில்லை என்பதைத்தான். இதனால் அன்றிலிருந்து இன்றுவரை தருமிகள் பலர்தான் வாழ்ந்து இருக்கிறார்கள்.

சுமந்திரனும் வேறு சில புலம்பெயர் குழுவினரும் குறிப்பிடுவது பொதுவாகத் தமிழ்ப் பிரதேசங்களில் அக்கறை கொண்டு போராட்ட காலங்களிலும் பின்னரும் நிதி தந்த தமிழ் உணர்வாளர்களையா அல்லது முதலீடுகளுக்கு விருப்பம் கொண்ட தனிப்பட்ட முதலீட்டாளர்களையா என்பதும் தெளிவு இல்லை. எந்த விதங்களிலானாலும் அவை கணக்குகள் தரக்கூடிய – தணிக்கைக்கு ஆட்படுத்தப்படும் – புலம் பெயர் சர்வதேசக் கட்டமைப்பு ஊடாகத்தான் பெறப்பட வேண்டும். அது மக்களுக்கு நம்பிக்கையையும், இந்த நிதி முதலீடு செய்வது ஒப்பீட்டளவில் பேரம் பேசக்கூடிய தகுதியையும் வழங்கும்.

அடுத்து, பொருளாதாரத்தில் தன்னிறைவு கொள்ள வேண்டுமானால் அதற்கு அனுசரணையான அரசாக இன்றைய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் சிறிலங்காவின் பேரினவாத அரசுகள் முன்வருமா என்ற கேள்வி முதலில் எழுகிறது. அல்லது ஒப்பந்தத்தின் பின் வந்த இந்த 35 வருட காலங்களில் சைப்ரஸின் துருக்கியர் தன்னிறைவு பெற்ற விதங்களில் தமிழ் மக்கள் இந்தியாவில் அனுகூலத்தில் தன்னிறைவு பெற்றுப் பேரம் பேசும் ஆற்றலைப் பெருக்காமல் விட்டிருந்தாலும், இப்பொழுது இந்தியா ஸ்ரீலங்காவிற்காக முன்வைக்கு மீட்பு பாதைகளில் இணைந்து செல்வது உகந்ததா, அன்றில், தமிழ் புலம்பெயர் சமூகமும் அவர்கள் வாழ்ந்து முதலீடுகள் செய்து இப்போது வசிக்கும் சர்வதேச நாடுகள் உகந்தவையா என்ற தவிர்க்க முடியாத கேள்விகள் எழுகின்றன. இவற்றை ஒவ்வொன்றாகப் பின்னர் பார்ப்போம்

**தமிழ் மக்களின் முன்னாலுள்ள அனுகுமுறைகள் என்ன?**

சம்பந்தன் தெரிவித்த கருத்துக்களை எதிரொலிப்பது போல் சுமந்திரனின் ஒரு செவ்வி அமைந்தது. ஊடகங்களும் அவற்றைப் பிரபலப்படுத்தி செய்திகள் வெளியிட்டுள்ளன. நாடு எதிர் கொண்டிருக்கும் நிலையில், அதிகாரங்களை இதுவரை விட்டுக் கொடுக்காது ராஜபக்ஷக்கள் அவற்றைக் கட்டுப்படுத்துவது, அவர்களை வெளியேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது, அவர்களை வெளியேற்றும் முயற்சியில் முன்னேறி வந்து, தேசிய அரசு அமைப்பது என்ற சாத்தியக்கூறுகளையும் ரணில் சுழியோடி, குலைத்து, இப்போது ராஜபக்ஷவின் கட்டுப்பாடுகளால் எதையும் நடைமுறைப்படுத்த முடியாதவராக அவர்களின் பாதுகாவலராக இருக்கிறார் என்ற மக்களின் ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளார் சுமந்திரன்.





கோட்டா தோற்றுப்போன ஜனாதிபதி, மக்கள் தந்த ஆணையை இன்றைய நிலையில் இழந்துவிட்டார். மாறி மாறி அரசு அமைத்து, பின்னர் ரணிலைப் பிரதமராக்கி, எதுவித முன்னேற்றத்தையும் மாற்றங்களையும் மக்கள் காணவில்லை, அவற்றால் நாடாளுமன்றமும் மக்களின் ஆணையயை இழந்து விட்டது, தொடர்ந்தும் அவர் பதவிகளுக்கு ஆள்களைத் தேடி மாற்றாமல், நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, மக்களிடமே தீர்ப்பை விட்டுவிட்டு, புதிய நாடாளுமன்றத்தை உருவாக்க வேண்டும் என்பது அவரது வாதம்.

அப்படியான மாற்றங்களால் ஏற்படும் புதிய நிலைமைகளால் நாடாளுமன்ற அங்கத்தினர்கள் புதியவர்களாவர்கள். புதிய பிரதமர் வரலாம். ஆக, ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து விலக்கியதாகவும் கொள்ளலாம். அது, மக்களின் புதிய ஆணையாகவும் அமையும். ஆனால் அது பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு தரக்கூடிய வல்லமை உள்ள அரசாகுமா? அல்லது நாட்டின் அடிமட்ட இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு, ஸ்திரத்தன்மை வரும் என்ற நம்பிக்கையை சர்வதேசத்திற்கு தரக்கூடுமா? ஆகக் கூட ஆட்சி மாற்றமும், அதற்கான தேர்தல் என்பதும் நியாயமானவை என்றாலும், தோற்றுவிட்ட ஒரு கட்சியை அதிகாரத்தில் இருந்து விலக்கி விட்டு, அதே குட்டைகளில் உரிய இன்னுமொரு மட்டையை அல்லது தேர்தல் வெற்றிக்காக கூட்டு சேர்ந்த சில மட்டைகளை அதிகாரத்துக்கு தெரிவாக்குவதாகத்தான் அது முடியும்.

உதாரணத்துக்கு கூட்டமைப்பு (இது அவரது நிலைப்பாடு அல்ல) சஜித்தையும் அவரது சகாக்களையும் ஆதரித்து வெற்றி பெற உதவி தந்தாலும், அவரது (சஜித்தின்) குழுமத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் கட்சிகள், ஜே.வி.பி. உட்பட பல பேரினவாதக் குழுக்களும் இருப்பார்கள். இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஒருமித்த கருத்து இவர்களிடம் இல்லை. ஆனால் ராஜபக்ஷக்களை விலக்க வேண்டும் என்பதில் உண்டு. சம்பந்தனினாலோ அல்லது சுமந்திரனினாலோ அவர்களது பேச்சுவார்த்தைகளில் சஜித்தின் குழுமம் இனப்பிரச்சினையை சமஷ்டி அல்லது 13 பிளஸ் என்ற அதிகாரப் பரவல் முறையில் தீர்க்க ஒத்துக்கொண்டு, அதனை நடைமுறைப்படுத்த தயாராக உள்ளது என்பதை தேர்தலில் மக்கள் ஆமோதிக்கச் செய்யவேண்டும் என்ற கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கச் செய்ய முடியுமா?

தமிழர் உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என 1976ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன், வட்டுக்கோட்டை தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றியிருந்தும் ஜே.ஆர். தந்த வாக்குறுதியில் அவர் பதவிக்கு வந்தால் சர்வகட்சி மாநாடு ஒன்றின் மூலம் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்பதை நம்பி ஏற்று, அவரது வெற்றிக்கு வழி வகுத்தார்கள்.

அந்த நெளிவு சுளிவுகளை அறிந்தவராக சுமந்திரன் அன்று அரசியலில் இல்லை .ஆனால் சம்பந்தன் இருந்தார்.

ஜே.ஆர். பின்னர் தந்த தீர்வுகளின் அனுபவங்களில், சம்பந்தன் இப்போது தீர்வு பற்றித்தான் அரசு மாற்றத்துக்காகக் கேட்கும் தேர்தலில் அந்தத் தீர்வை மக்களது ஆணைக்கு முன்வைக்கக் கண்டிமைப் படுத்துவாரா? அல்லது ஆகட்டும் பார்க்கலாம், பொங்கல் வரும், பின் தீபாவளி வரும் என்று வாழ்த்து மடல்கள் தயாரிப்பாரா? இந்த அணுகுமுறை மொந்தைக்கள்ளு புதிய பிழாவில் வார்க்கப்படுவதுதான். ரணிலுடன் பிடித்த சிங்கக் கொடியின் மறு அவதாரமாகவே அது அமையும்.

(வளரும்)



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=